**2023**

# உலகத் தரவரிசை: 401–500 ஆவது பிரிவில் அழகப்பா பல்கலை.

**காரைக்குடி, அக். 12:** சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் உள்ள அழகப்பா பல்கலைக்கழகம், உலகப் பல்கலைக்கழகத் தரவரிசைப் பட்டியலில் 401-500 ஆவது பிரிவில் இடம் பெற்றுள்ளது.

டைம்ஸ் உயர் கல்வி நிறுவனத்திடம் கடந்த 2022-ஆம் ஆண்டு மார்ச் மாதத் தரவுகளின் அடிப்படையில் 104 நாடுகளைச் சேர்ந்த 2,500-க்கும் மேற்பட்ட உலக அளவிலான கல்வி நிறுவனங்கள் தங்களது தரவுகளை சமர்ப்பித்திருந்தனர். மொத்தம் 1,799 பல்கலைக்கழகங்கள் தரவரிசையில் இடம் பெற்றுள்ளன. இதில், அழகப்பா பல்கலைக்கழகமானது தரவரிசையில் 401-500 ஆவது பிரிவில் இடம் பெற்றுள்ளது.

அழகப்பா பல்கலைக்கழகம் இந்தியாவிலிருந்து கலந்து கொண்ட உயர்கல்வி நிறுவனங்களில் 4 ஆவது இடத்தையும், தமிழக அளவில் முதலிடத்தையும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.



அழகப்பா பல்கலைக்கழகம் உலகத் தரவரிசையில் 401-500 வது பிரிவில் இடம்பெற்றதற்கான பட்டியலை துணைவேந்தர் க.ரவியிடம் சமர்ப்பித்த பல்கலைக்கழகத்தின் தரவரிசை தரவு இயக்குநர் ஜெ.ஜெயகாந்தன் (இடது).

டைம்ஸ் உயர்கல்வி நிறுவனம் கற்பித்தல், ஆராய்ச்சி, அறிவு பரிமாற்றம் மற்றும் சர்வதேச கண்ணோட்டம் ஆகிய நான்கு குறிப்பிட்ட பகுதிகளின் கீழ் உயர்கல்வி நிறுவனங்களின் செயல்திறனை மதிப்பீடு செய்து தரவரிசைப்படுத்துகிறது.

அழகப்பா பல்கலைக்கழக தரவரிசைப் பிரிவின் இயக்குநர் பேராசிரியர் ஜெ.ஜெயகாந்தன் மற்றும் குழுவினர் பல்கலைக் கழகத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான தரவுகளை சேகரித்து சமர்ப்பித்திருந்தனர். தரவரிசை முடிவுகளை பல்கலைக்கழகத் துணைவேந்தர் க.ரவியிடம் பேராசிரியர் ஜெயகாந்தன் சமர்ப்பித்தார்.

உலகத் தரவரிசையில் பல்கலைக்கழகத்தை இடம்பெறச் செய்த பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களை துணைவேந்தர் பாராட்டினார்.

# ஆசிய பல்கலைக்கழகத் தரவரிசையில் அழகப்பா பல்கலைக்கழகத்துக்கு 122 ஆம் இடம்

**காரைக்குடி, ஜூன் 6:** காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் ஆசியப் பல்கலைக்கழகத் தரவரிசைப் பட்டியலில் 122-ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

கடந்த 2021-ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 829-க்கும் மேற்பட்ட ஆசிய அளவிலான கல்வி நிறுவனங்கள் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன. இத்தரவரிசையில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகமானது 122-ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. இந்தியாவிலிருந்து கலந்து கொண்ட உயர்கல்வி நிறுவனங்களில் அழகப்பா பல்கலைக்கழகம் 6-ஆவது இடத்தையும், தமிழக அளவில் முதலிடத்தையும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. லண்டனில் உள்ள டைம்ஸ் உயர்கல்வி நிறுவனம் இத்தரவரிசைக்காக, கற்பித்தல், ஆராய்ச்சி, அறிவு பரிமாற்றம், சர்வதேசக் கண்ணோட்டம் மற்றும் தொழில் துறை வருமானம் ஆகிய ஐந்து குறிப்பிட்ட பகுதிகளின் கீழ் உயர் கல்வி நிறுவனங்களின் செயல்திறனை மதிப்பீடு செய்து தரவரிசைப்படுத்தியுள்ளது.

இத்தரவரிசைப்பட்டியலில் கலந்து கொள்வதற்காக அழகப்பா பல்கலைக்கழக தரவரிசைப்பிரிவின் இயக்குநர் ஜெ. ஜெய காந்தன் மற்றும் குழுவினர் பல்கலைக்கழகத்தின் 2021-ஆம் ஆண்டுக்கான தரவுகளை சேகரித்து, சரியாகப் பகுப்பாய்வு செய்து சமர்ப்பித்திருந்தனர்.

இந்த உயரிய தரவரிசையில் அழகப்பா பல்கலைக்கழகத்தை இடம் பெற செய்த பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களை துணைவேந்தர் பொறுப்புக்குழுத்தலைவரும், தமிழக உயர் கல்வித்துறை முதன்மை செயலாளருமான டி. கார்த்திகேயன், துணைவேந்தர் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் இரா. சுவாமிநாதன், சு.கருப்புச்சாமி மற்றும் ஆட்சிக் குழு உறுப்பினர்கள் மு. சங்கரநாராயணன், மு. குணசேகரன், எம். எல். ராஜா மற்றும் பதிவாளர் (பொறுப்பு) எஸ். ராஜாமோகன் ஆகியோர் பாராட்டினர்.

தினகரன்



### ஆராய்ச்சி தரத்தினை தேசிய அளவில் உயர்த்த

# பல்வேறு பல்கலையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் ஜி.ரவி தலைமையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது.

**காரைக்குடி, ஜூன் 6:** காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் மற்றும் எஸ்ஆர்எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யும் நிகழ்வு நடந்தது. துணைவேந்தர் பேராசிரியர் ஜி.ரவி தலைமையில் எஸ்ஆர்எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகதுணைவேந்தர் பேராசிரியர் முத்தமிழ்ச் செல்வன் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

மூத்த பேராசிரியர்கள் உயிரி தகவலியல் துறை தலைவர் ஜெயகாந்தன், பதிவாளர் ராஜமோகன், உள்தரமதிப்பீட்டு பிரிவு தலைவர் அலமேலு, மாணவர்கள் நலன் முதன்மையர் வேதிராஜன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## துணைவேந்தர் ஜி.ரவி பேச்சு

துணைவேந்தர் பேராசிரியர் ஜி.ரவி பேசுகையில், இந்த உடன்படிக்கை மூலம் பல்கலைக்கழக பேராசிரியர்கள், முதுகலை மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் இரண்டு பல்கலைக் கழகங்களுக்குள் இடம் மாறி ஆராய்ச்சிகளை மேற்கொள்ள உதவும். இப்பல்கலைக்கழக கல்வி மற்றும் ஆராய்ச்சி தரத்தினை தேசிய மற்றும் உலக அளவில் உயர்த்திக் கொள்ள இதுபோன்ற உடன்படிக்கைகள் உதவும். 5 ஆண்டுகளுக்கான இந்த உடன்படிக்கையின் படி கூட்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும். அரிய பல தகவல்களை பரிமாறுவதற்கும், கல்வி நிறுவனங்களின் தொழில்நுட்பத்தினை பயன்படுத்துவதற்கும் பயனாக இருக்கும். இதன் மூலம் மாணவர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்க வாய்ப்புள்ளது என்றார்.

## உயர்கல்வி நிறுவனங்களின் தரவரிசை

# தமிழக அளவில் அழகப்பா பல்கலைக் கழகம் 3-ஆவது இடம்



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் உயர்கல்வி நிறுவனங்களின் தரவரிசையில் தமிழக அளவில் மூன்றாவது இடம் பெற்றதற்கான சான்றை புதன்கிழமை வெளியிட்ட துணைவேந்தர் க. ரவி, பதிவாளர், பேராசிரியர்கள் உள்ளிட்டோர்.

**காரைக்குடி, ஜூன் 7:** மத்திய கல்வி அமைச்சகத்தின் தேசியக் கல்வி நிறுவன தரவரிசைப் பட்டியலில், தமிழக அளவில் உயர்கல்வி நிறுவனங்களில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் மூன்றாவது இடத்தைப் பெற்றது.

தில்லியில் கடந்த திங்கள்கிழமை (ஜூன் 5) மத்தியக் கல்வி, வெளியுறவுத் துறை அமைச்சகமானது தேசியக் கல்வி நிறுவன தரவரிசைப் பட்டியலை வெளியிட்டது. இதில் அழகப்பா பல்கலைக் கழகம் அகில இந்திய அளவில் 30-ஆவது இடமும், அகில இந்திய ஆராய்ச்சி நிறுவனங்களுக்கான இடங்களில் 43-ஆவது இடமும் பெற்றது. மேலும், அகில இந்திய அளவில் 2,478 உயர்கல்வி நிறுவனங்களுக்குள் அழகப்பா பல்கலைக்கழகம் 56-ஆவது இடத்தைப் பெற்றது.

தமிழகத்தில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களின் தரவரிசையிலும், பல்கலைக்கழகம், ஆராய்ச்சி நிறுவனங்களின் தரவரிசையிலும் அழகப்பா பல்கலைக்கழகம் 3-ஆவது இடத்தைப் பெற்றது.

இந்த தரவரிசைப் பட்டியலில் பங்கேற்க அழகப்பா பல்கலைக் கழக தரவரிசைப் பிரிவின் இயக்குநர் ஜெ. ஜெயகாந்தன் தலைமையிலான குழுவினர் தரவுகளை இந்த பல்கலைக் கழகத்தின் துறை, நிர்வாகப் பிரிவுகளிடமிருந்து சேகரித்து சமர்ப்பித்தனர்.

இந்த உயர்ந்த தரவரிசைப் பெறுவதற்காக உழைத்த பேராசிரியர்கள், அலுவலர்கள், ஆராய்ச்சி, முதுகலை மாணவர்களை அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் க. ரவி பாராட்டினார்.

## அழகப்பா பல்கலைக்கழகம் இந்திய அளவில் 6வது இடம்

**காரைக்குடி, ஜூன் 8:** காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் டைம்ஸ் உயர்கல்வி நிறுவனத்தால் வெளியிடப்பட்ட ஆசியப் பல்கலைக்கழக தரவரிசை பட்டியலில் 122வது இடத்தையும், இந்திய அளவில் 6வது மற்றும் தமிழக அளவில் முதலிடம் பெற்றுள்ளது.

டைம்ஸ் உயர்கல்வி நிறுவனம் கற்பித்தல், ஆராய்ச்சி, அறிவு பரிமாற்றம், சர்வதேச கண்ணோட்டம் மற்றும் தொழில்துறை வருமானம் ஆகிய ஐந்து குறிப்பிட்ட பகுதிகளில் உயர் கல்வி நிறுவனங்களின் செயல்திறனை மதிப்பீடு செய்து தரவரிசைப்படுத்தி வருகிறது. இத்தரவரிசை பட்டியலில் கலந்து கொள்வதற்காக இப் பல்கலைக்கழக தரவரிசை பிரிவின் இயக்குநர் பேராசிரியர் ஜெயகாந்தன் மற்றும் குழுவினர் பல்கலைக்கழகத்தின் 2021ம் ஆண்டுக்கான தரவுகளை சேகரித்து, சரியாக பகுப்பாய்வு செய்து சமர்ப்பித்திருந்தனர்.

இத்தரவுகளின் அடிப்படையில் 829க்கும் மேற்பட்ட ஆசிய அளவிலான கல்வி நிறுவனங்கள் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன. இதில் அழக்கப்பா பல்கலைக்கழகம் ஆசிய அளவில் 122வது இடத்தையும், இந்தியாவிலிருந்து கலந்து கொண்ட உயர்கல்வி நிறுவனங்களில் 6வது இடத்தையும், தமிழக அளவில் முதலிடத்தையும் பெற்றுள்ளது. இந்த உயரிய தரவரிசையில் பல்கலைக் கழகத்தை இடம் பெற செய்த பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களை துணைவேந்தர் பொறுப்புக் குழு தலைவர், உயர்கல்வி முதன்மை செயலாளர் முனைவர் கார்த்திகேயன், துணைவேந்தர் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் டாக்டர் சுவாமிநாதன், பேராசிரியர் கருப்புச்சாமி, பதிவாளர் ராஜாமோகன், ஆட்சிக்குழு உறுப்பினர்கள் முனைவர் குணசேகரன், பேராசிரியர் சங்கரநாராயணன், டாக்டர் ராஜா ஆகியோர் பாராட்டினர்.

---

### தேசிய தரவரிசை பட்டியல்

# காரைக்குடி அழகப்பா பல்கலை தமிழக அளவில் 3வது இடம்



▶ காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக தேசிய கல்வி நிறுவன தரவரிசையில் தமிழக அளவில் 3வது இடத்தை பெற்றுள்ளதை துணைவேந்தர் பேராசிரியர் ஜி.ரவி வெளியிட்டார்.

## துணைவேந்தர் ஜி.ரவி தகவல்

**காரைக்குடி, ஜூன் 8:** தேசிய கல்வி நிறுவன தரவரிசை பட்டியலில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் தமிழக அளவில் 3வது இடத்தை பெற்றுள்ளது என துணைவேந்தர் ஜி.ரவி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது, "ஒன்றிய கல்வி அமைச்சகத்தின் தேசிய கல்வி நிறுவன தரவரிசை அமைப்பு (என்.ஐ.ஆர்.எப்) கடந்த 2016ம் ஆண்டு முதல் பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான தரவரிசைப் பட்டியலை வெளியிட்டு வருகிறது. இத்தரவரிசையில் 8வது முறையாக 2023ம் ஆண்டிற்கு நடத்தப்பட்ட பல்கலைக் கழகங்களுக்கான தரவரிசைப் பட்டியலில் அழகப்பா பல்கலைக்கழகம் அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்குள் 30வது இடம் பெற்றுள்ளது.

தமிழ்நாட்டில் இருந்து கலந்து கொண்ட உயர் கல்வி நிறுவனங்களின் தரவரிசையில் 3வது இடத்தை பெற்றுள்ளது. இப் பல்கலைக்கழகம் தேசிய தர நிர்ணய குழுவால் வழங்கப்பட்ட ஏ பிளஸ் அங்கீகாரம். க்யூஎக்ஸ் தரவரிசையில் ஆசிய அளவில் 251 முதல் 260 இடம். உயர் கல்வி நிறுவனத்தால் வெளியிடப்பட்ட உலக பல்கலைக்கழக தரவரிசைப் பட்டியலில் 401 முதல் 500 இடம். டைம்ஸ் உயர் கல்வி நிறுவனத்தால் வழங்கப்பட்ட இளம் பல்கலைக் கழகங்களுக்கான தரவரிசையில் 138வது இடம். ஆசிய அளவில் பல்கலைக் கழகங்களுக்கான தரவரிசையில் 122வது இடம் பெற்றுள்ளது. இந்த உயரிய தரவரிசையில் பல்கலைக்கழகத்தை இடம்பெற செய்த பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் ஆராய்ச்சி, முதுகலை மாணவர்களை துணைவேந்தர் பேராசிரியர் ஜி.ரவி பாராட்டினார்.

# உலக பல்கலை., தரவரிசையில் அழகப்பா பல்கலைக்கு இடம்

**காரைக்குடி, அக்.13–** காரைக்குடி அழகப்பா பல்கலை., உலக பல்கலை., தர வரிசை பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

2022 மார்ச்சில் சமர்ப் பிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில், 104 நாடு களைச் சேர்ந்த 2500க்கும் மேற்பட்ட கல்வி நிறு வனங்கள் இதில் பங் கேற்றது. 1799 பல்கலை., தரவரிசையில் இடம் பெற்றுள்ளன. இதில் அழகப்பா பல்கலை., உலக பல்கலை., தர வரிசையில் 401 முதல் 500வது பிரிவில் இடம் பெற்றுள்ளது.

இந் தி யா வி லி ருந் து கலந்து கொண்ட உயர் கல்வி நிறுவனங்களில் 4வது இடத்தையும், தமிழக அளவில் முதல் இடத்தையும் காரைக்குடி அழகப்பா பல்கலை., பெற்றுள்ளது.

டைம்ஸ் உயர்கல்வி நிறுவனம் கற்பித்தல், ஆராய்ச்சி, அறிவு பரிமாற் றம் மற்றும் சர்வதேச கண் ணோட்டம் ஆகிய நான்கு பகுதிகளின் கீழ் உயர் கல்வி நிறுவனங்களின் செயல் திறனை மதிப்பீடு செய்து தரவரிசை படுத்தி யுள்ளது. உலக அளவில் 40 ஆயிரம் அறிஞர்களின் கருத்துக்களையும் மதிப் பீடு செய்துள்ளது. இத் தரவரிசை பட்டியலுக்கு அழகப்பா பல்கலை தர வரிசை பிரிவு இயக்குனர் ஜெ .ஜெயகாந்தன் மற்றும் குழுவினர் தரவுகளை சேக ரித்த பகுப்பாய்வு செய்ய சமர்ப்பித்திருந்தனர்.

பேராசிரியர் ஜெயகாந் தன், டைம்ஸ் உயர்கல்வி நிறுவன தரவரிசை பட்டி யலை பல்கலை., துணை வேந்தர் க. ரவியிடம் காண் பித்து வாழ்த்து பெற்றார்.

## தமிழக அளவிலான தரவரிசை பட்டியலில்

# காரைக்குடி அழகப்பா பல்கலை. 3-வது இடம்

இந்து தமிழ்

● காரைக்குடி

தமிழக அளவில் தரவரிசையில் காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகம் 3-வது இடம் பிடித்ததை அடுத்து, பேராசிரியர்களை துணை வேந்தர் ரவி பாராட்டினார்.

மத்திய கல்வி அமைச்சகத்தின் தேசிய கல்வி நிறுவன தரவரிசை அமைப்பு கடந்த 2016-ம் ஆண்டு முதல் பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான தரவரிசையை வெளியிட்டு வருகிறது.

அதன்படி இந்தாண்டு வெளியிடப்பட்ட தரவரிசைப் பட்டியலில் காரைக் குடி அழகப்பா பல்கலைக் கழகம், இந்திய அளவில் பல்கலைக் கழகங்களில் 30-வது இடம், அகில இந்திய ஆராய்ச்சி நிறுவனங்களில் 43-வது இடம் பெற்றுள்ளது.



↑ சிறந்த தரவரிசையில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் இடம்பெற செயல்பட்ட தரவரிசைப் பிரிவு இயக்குநர் ஜெயகாந்தன் உள்ளிட்டோரை பாராட்டிய துணைவேந்தர் ரவி.

மேலும் 2,478 உயர்கல்வி நிறுவனங்களுக்குள் அழகப்பா பல்கலைக்கழகம் 56-வது இடம் பெற்றுள்ளது. தமிழக அளவில் உயர்கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் என மூன்று தரவரிசையிலும் 3-வது இடத்தைப் பெற்றுள்ளது. சிறந்த தரவரிசையில் இடம்பெற செயல்பட்ட தரவரிசைப் பிரிவு இயக்குநர் ஜெயகாந்தன் தலைமையிலான குழுவினர் மற்றும் பேராசிரியர்கள், அலுவலர்கள், ஆராய்ச்சி மாணவர்களை துணைவேந்தர் ரவி பாராட்டினார்.

தினகரன்



அதே ஊரில் தேசிய எண் யம் (நிலக்கடலை) போன்ற

## தேசிய தரவரிசை பட்டியல்

# காரைக்குடி அழகப்பா பல்கலை தமிழக அளவில் 3வது இடம்



▶ காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக தேசிய கல்வி நிறுவன தரவரிசையில் தமிழக அளவில் 3வது இடத்தை பெற்றுள்ளதை துணைவேந்தர் பேராசிரியர் ஜி.ரவி வெளியிட்டார்.

## துணைவேந்தர் ஜி.ரவி தகவல்

**காரைக்குடி, ஜூன் 8:** தேசிய கல்வி நிறுவன தரவரிசை பட்டியலில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் தமிழக அளவில் 3வது இடத்தை பெற்றுள்ளது என துணைவேந்தர் ஜி.ரவி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது, "ஒன்றிய கல்வி அமைச்சகத்தின் தேசிய கல்வி நிறுவன தரவரிசை அமைப்பு (என்.ஐ.ஆர்.எப்) கடந்த 2016ம் ஆண்டு முதல் பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான தரவரிசைப் பட்டியலை வெளியிட்டு வருகிறது. இத்தரவரிசையில் 8வது முறையாக 2023ம் ஆண்டிற்கு நடத்தப்பட்ட பல்கலைக் கழகங்களுக்கான தரவரிசைப் பட்டியலில் அழகப்பா பல்கலைக்கழகம் அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்குள் 30வது இடம் பெற்றுள்ளது.

தமிழ்நாட்டில் இருந்து கலந்து கொண்ட உயர் கல்வி நிறுவனங்களின் தரவரிசையில் 3வது இடத்தை பெற்றுள்ளது. இப் பல்கலைக்கழகம் தேசிய தர நிர்ணய குழுவால் வழங்கப்பட்ட ஏ பிளஸ் அங்கீகாரம். க்யூஎக்ஸ் தரவரிசையில் ஆசிய அளவில் 251 முதல் 260 இடம். உயர் கல்வி நிறுவனத்தால் வெளியிடப்பட்ட உலக பல்கலைக்கழக தரவரிசைப் பட்டியலில் 401 முதல் 500 இடம். டைம்ஸ் உயர் கல்வி நிறுவனத்தால் வழங்கப்பட்ட இளம் பல்கலைக் கழகங்களுக்கான தரவரிசையில் 138வது இடம். ஆசிய அளவில் பல்கலைக் கழகங்களுக்கான தரவரிசையில் 122வது இடம் பெற்றுள்ளது. இந்த உயரிய தரவரிசையில் பல்கலைக்கழகத்தை இடம்பெற செய்த பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் ஆராய்ச்சி, முதுகலை மாணவர்களை துணைவேந்தர் பேராசிரியர் ஜி.ரவி பாராட்டினார்.

# அழகப்பா பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம்



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம், கோவை கற்பகம் நிகர்நிலை பல்கலைக்கழகத்துடன் செவ்வாய்க்கிழமை செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் க. ரவி, கற்பகம் நிகர்நிலை பல்கலைக்கழக துணைவேந்தர் பி. வெங்கிடாசலபதி, பேராசிரியர்கள்.

**காரைக்குடி, ஜூன் 13:** சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம், கோவை கற்பகம் நிகர்நிலைப் பல்கலைக்கழகத்துக்கிடையே, ஆராய்ச்சிப் படிப்புகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செவ்வாய்க்கிழமை கையெழுத்தானது. ராப்பமிடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தில் அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் க. ரவி, கற்பகம் நிகர்நிலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பி. வெங்கடாசலபதி ஆகியோர் கையொப்பமிட்டனர்.

இந்த நிகழ்வின் போது, கற்பகம் நிகர்நிலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி, மேம்பாட்டுத் துறை பேராசிரியர் வி. பார்த்தசாரதி, அழகப்பா பல்கலை. பதிவாளர் (பொறுப்பு) எஸ். ராஜமோகன், மூத்த பேராசிரியர்கள் ஜெ. ஜெயகாந்தன், கே. அலமேலு, சி. வேதிராஜன், ஏ. பத்மபிரியா ஆகியோர் உடனிருந்தனர். இந்த நிகழ்ச்சியில் அழகப்பா பல்கலை. துணைவேந்தர் க. ரவி பேசியதாவது:

இந்த ஒப்பந்தத்தின்படி முதுகலை, ஆராய்ச்சி மாணவர்கள் இரண்டு பல்கலைக்கழகங்களுக்குள் இடம் மாறி ஆராய்ச்சிகளை மேற்கொள்ள முடியும். மேலும் அழகப்பா பல்கலைக்கழகக் கல்வி ஆராய்ச்சித் தரத்தினை உலகளவில் உயர்த்திக் கொள்ள உதவும் என்றார்.

கற்பகம் நிகர்நிலைப் பல்கலை. துணைவேந்தர் பி. வெங்கடாசலபதி பேசியதாவது:

மாணவர்களுக்கு தேசிய ஆராய்ச்சி நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளும், ஆராய்ச்சி கல்விப் பயிலவும் வழிவகுக்கும். மேலும் புதிய ஆராய்ச்சிகளின் மூலம் நாட்டு மக்கள் பயனடைவர் என்றார்.

பட்ஜெட்டுகளுள் சாப்பிட தயார் செய்யப்படும் உணவு எழுந்துள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

# கல்வி,ஆராய்ச்சி தரத்தை மேம்படுத்த உதவும்



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் மற்றும் கற்பகம் நிகர்நிலை பல்கலைக்கழக புரிந்துணர்வு ஒப்பந்தம் துணைவேந்தர் ஜி.ரவி தலைமையில் கையெழுத்திடப்பட்டது.

## துணைவேந்தர் ஜி.ரவி பேச்சு

**காரைக்குடி, ஜூன் 15:** காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் மற்றும் கற்பகம் நிகர்நிலை பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தகம் செய்யும் நிகழ்வு நடந்தது. அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஜி.ரவி, கற்பகம் நிகர்நிலை பல்கலைக்கழகதுணைவேந்தர் டாக்டர் வெங்கடாசலபதி ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

பின்னர் துணைவேந்தர் ஜி.ரவி தெரிவிக்கையில், இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் இரண்டு பல்கலைக்கழகங்களுக்குள் இடம் மாறி ஆராய்ச்சிகளை மேற்கொள்ள உதவும். அழகப்பா பல்கலைக்கழக கல்வி மற்றும் ஆராய்ச்சி தரத்தினை தேசிய மற்றும் உலக அளவில் உயர்த்திக் கொள்ள இவ் உடன்படிக்கை பெரிதும் உதவும். இந்த ஒப்பந்தத்தின்படி கூட்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளும்போது அரிய தகவல்களை பரிமாறுவதற்கும், கல்வி நிறுவனங்களின் தொழில் நுட்பத்தினை பயன்படுத்தவும், அந்த தொழில்நுட்பத்தினை இப் பல்கலைக்கழகத்திற்கு கொண்டு வரவும் உதவியாக இருக்கும் என்றார். கற்பகம் நிகர்நிலை பல்கலைக்கழக துணைவேந்தர் வெங்கடாசலபதி பேசினார். பதிவாளர் ராஜமோகன், மூத்த பேராசிரியர் ஜெ.ஜெயகாந்தன், உள்தர மதிப்பீட்டு பிரிவு தலைவர் அலமேலு, மாணவர்கள் நலன் முதன்மையர் வேதிராஜன், திட்டம் மற்றும் வளர்ச்சி பிரிவு தனி அலுவலர் பேராசிரியர் பத்மபிரியா, கற்பகம் நிகர்நிலை பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத்துறை பேராசிரியர் பார்த்தசாரதி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

Enable | Enlighten | Enrich

KARPAGAM
ACADEMY OF HIGHER EDUCATION
(Deemed to be University)
(Established Under Section 3 of UGC Act, 1956 )

**f.K.I./KAHE/Date 15.06.2023/S.No.214/P.R0**

தினத் தந்தி
DAILY THANTHI



### கற்பகம் நிகர்நிலை பல்கலைக்கழகம்

# அழகப்பா பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

கோவை, ஜூன்.15–

காரைக்குடியில் உள்ள அழகப்பா பல்கலைக்கழகம், கோவையில் உள்ள கற்பகம் நிகர்நிலை பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யும் நிகழ்ச்சி அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடந்தது. இதில், அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் க.ரவி, கற்பகம் நிகர்நிலை பல்கலைக்கழக துணைவேந்தர் பி.வெங்கடாசலபதி ஆகியோர் கையெழுத்திட்டனர். இந்த நிகழ்ச்சியில் கற்பகம் நிகர்நிலை பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத்துறை பேராசிரியர் வி.பார்த்தசாரதி, உயிரி தகவலியல் துறை தலைவர் ஜெ.ஜெயகாந்தன், பதிவாளர் (பொறுப்பு) எஸ்.ராஜமோகன், உள்தரமதிப்பீட்டுப்பிரிவு தலைவர் கே.அலமேலு, மாணவர்கள் நலன் முதன்மையாளர் சி.வேதிராஜன், திட்டம் மற்றும் வளர்ச்சி பிரிவு தனி அலுவலர் ஏ.பத்மபிரியா மற்றும் பேராசிரியர்கள் உடன் இருந்தனர். அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் க.ரவி பேசும்போது, பல்கலைக்கழக பேராசிரியர்கள், முதுகலை மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் கூட்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளும்போது அரிய தகவல்களை பரிமாறவும், தொழில் நுட்பத்தை பயன்படுத்தவும் உதவியாக இருக்கும் என்றார்.

இதுகுறித்து கற்பகம் நிகர்நிலைப்பல்கலைக்கழக துணைவேந்தர் பி.வெங்கடாசலபதி கூறும்போது, மாணவர்களுக்கு தேசிய மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் வேலைவாய்ப்புகளும், ஆராய்ச்சி கல்விக்கும் வழிவகுக்கும். புதிய ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளின் மூலம் நாட்டு மக்களும் பயன்பெறுவார்கள் என்றார்.

## காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா

# 1,124 பேருக்கு ஆளுநர் பட்டம் வழங்கினார்

காரைக்குடி, ஜன. 23: காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடந்த 33வது பட்டமளிப்பு விழாவில் 1,124 பேருக்கு தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி பட்டங்களை வழங்கினார்.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் 33வது பட்டமளிப்பு விழா 3 ஆண்டுகளுக்கு பிறகு நேற்று நடந்தது. துணைவேந்தர் ஜி.ரவி வரவேற்றார். தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி தலைமை வகித்து பட்டங்களை வழங்கினார். ஒன்றிய கல்வி மற்றும் திறன் மேம்பாடு, தொழில் முனைவோர் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்தினார். தமிழ்நாடு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் ஆகியோர் பங்கேற்றனர்.

விழாவில் தமிழ்நாடு ஆளுநரிடம் நேரடியாக 1,124 பேர் பட்டம் பெற்றனர். இதில் அறிவியலில் முதுமுனைவர் பட்டம் 4 பேர், கலைப்பிரிவில் முதுமுனைவர் பட்டம் ஒருவர், முனைவர் 646, எம்.பில் 31, முதுநிலை பட்டத்தில் முதல் தரம் 138, இளநிலையில் முதல்தரம் 26 பேர் ஆகியோர் பட்டம் பெற்றனர். இணைப்புக்கல்லூரிகளில் எம்.பில் பட்டத்தில் முதல் தரம் 20 பேர், முதுநிலையில் முதல் தரம் 61 பேர், இளநிலையில் முதல் தரம் 88 பேர், இணைவுக்கல்வித் திட்டத்தின் கீழ் முதுநிலை பட்டத்தில் முதல் தரம் 50 பேர், இளநிலையில் 59 பேர் நேரடியாக பட்டம் பெற்றனர். நேரடியாக பட்டம் பெற்றதில் ஆண்கள் 435, பெண்கள் 689 பேர்.

தவிர பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளில் படித்த 5,034 பேர், இணைப்புக் கல்லூரிகளில் படித்த 47,198 மாணவர்கள், இணைவுக் கல்வித் திட்டத்தின்கீழ் படித்த 8,706 பேர் மற்றும் தொலைநிலை கல்வி வாயிலாக படித்த 48,026 பேர் என மொத்தம் ஒரு லட்சத்து 9,615 பேர் பட்டம் பெறுகின்றனர். விழாவில் உயர்கல்வி முதன்மை செயலாளர் கார்த்திகேயன், கலெக்டர் மதுசூதன் ரெட்டி, முன்னாள் துணைவேந்தர் சுப்பையா, எம்எல்ஏக்கள் தமிழரசி, மாங்குடி, நகராட்சி சேர்மன் முத்துத்துரை உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பட்டமளிப்பு விழா அரங்கத்தில் அசம்பாவிதம் நடக்காமல் இருக்க ஒவ்வொரு இருக்கையின் வரிசையிலும் சாதாரண உடையில் போலீசார் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தனர். தண்ணீர் பாட்டிலுக்கும் அனுமதியளிக்கவில்லை. ஏஎஸ்பி ஸ்டாலின் தலைமையில் 863 போலீசார் மற்றும் ஊர்காவல் படையினர் என 1000க்கும் மேற்பட்டோர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு ஆளுநர் ரவி காரைக்குடியில் பட்டமளிப்பு விழாவினை முடித்துக் கொண்டு சென்னை புறப்பட்டு சென்றார். இதற்காக மதுரை விமான நிலையத்திற்கு வந்த தமிழ்நாடு ஆளுநர் ரவியை மதுரை மாவட்ட கலெக்டர் அனீஷ் சேகர், தென்மண்டல காவல் ஐஜி அஸ்ரா கார்க், மதுரை மாநகர காவல் ஆணையர் நரேந்திர நாயர் ஆகியோர் வரவேற்று வழியனுப்பி வைத்தனர்.



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடந்த பட்டமளிப்பு விழாவில் ஆளுநர் ஆர்.என்.ரவி, பேராசிரியர் ஜெயகாந்தனுக்கு அறிவியலில் முதுமுனைவர் பட்டம் வழங்கினார். அருகில் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான், தமிழக அமைச்சர்கள் க.பொன்முடி, கே.ஆர்.பெரியகருப்பன், துணைவேந்தர் ஜி.ரவி.

## பேராசிரியர்கள் இருக்கைகளை ஆக்கிரமித்த பாஜ கட்சியினர்

பட்டமளிப்பு விழா நடக்கும் போது வழக்கமாக விழா நேரம் மற்றும் ஆளுநர் வரும் நேரத்தில் பல்கலைக்கழக வளாகத்திற்கு முன்பு மட்டும் போக்குவரத்து தடை செய்யப்படும். ஆனால் இம்முறை வழக்கத்துக்கு மாறாக காலை 6 மணி முதல் பல்கலைக்கழகத்திற்கு வரும் அனைத்து சாலைகளையும் போலீசார் அடைத்துவிட்டனர். இதனால் கோட்டையூர், பொன்நகர் உள்பட பல்வேறு பகுதிகளுக்கு செல்ல முடியாமல் மக்கள் சிரமப்பட்டனர். பட்டமளிப்பு விழாவிற்கு கட்சியினரை அனுமதிப்பது இல்லை. ஆனால் இந்த விழாவில் பாஜ மாவட்ட தலைவர் மேப்பல் சக்தி மற்றும் கட்சி நிர்வாகிகள் 20க்கும் மேற்பட்டோர் கட்சி துண்டுடன் அரங்கத்தில் நுழைந்து பேராசிரியர்கள் அமரக்கூடிய இருக்கையில் அமர்ந்தனர். இது கல்வியாளர்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது.

புதிய கண்டுபிடிப்புகளை பார்வையிட வாய்ப்பு

# அழகப்பா பல்கலையில். இன்று பார்வையாளர் தினம்

## பேராசிரியர் ஜெயகாந்தன் தகவல்

காரைக்குடி, பிப். 28: காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் இன்று தேசிய அறிவியல் தினத்தை முன்னிட்டு பார்வையாளர்கள் தினம் கொண்டாடப்படுகிறது என ஒருங்கிணைப்பாளர் மற்றும் உயிரி தகவலியல் துறை தலைவர் பேராசிரியர் ஜெயகாந்தன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறியதாவது: காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் தேசிய அறிவியல் தினத்தை முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும் பார்வையாளர்கள் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு துணைவேந்தர் ஜி.ரவி, பதிவாளர் ராஜமோகன் அனுமதியுடன் நடத்தப்பட உள்ளது. இங்குள்ள 18 அறிவியல் துறைகளில் 75க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள் பணியாற்றுகின்றனர். இவர்கள் அதி நவீன கருவிகளை கொண்டு பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளனர். தவிர பல்வேறு புதிய ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பார்வையாளர்கள் தினத்தில் பள்ளி, கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள், அழகப்பா பல்கலைக்கழக அறிவியல் வளாகத்தில் உள்ள அறிவியல் ஆய்வகத்தில் உள்ள அதி நவீன கருவிகள் மற்றும் அதன் செயல்பாடுகளை நேரடியாக பார்வையிடலாம். மாணவர்கள் தங்களுக்கு எழும் சந்தேகங்களை தெரிந்து கொள்ளலாம். பாடங்களில் உள்ள சந்தேகங்களுக்கு ஆராய்ச்சி கருவிகள் மூலம் விளக்கம் அளிக்கப்படும். இன்று காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள். பல்கலைக்கழகத்தில் இருந்து இலவசமாக சிறப்பு பஸ் வசதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார். அமைப்பு செயலாளர் பேராசிரியர் வசீகரன் உடன் இருந்தார்.



▶ பேராசிரியர் ஜெயகாந்தன்.

இந்து தமிழ்

## தேசிய அளவிலான தரவரிசை பட்டியலில்

# காரைக்குடி அழகப்பா பல்கலை.க்கு 4-வது இடம்

● **காரைக்குடி**

காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகம் தேசிய அளவில் 4-வது இடத்தைப் பிடித்துள்ளது.

லண்டனைச் சேர்ந்த டைம்ஸ் உயர்கல்வி நிறுவனம் ஆண்டு தோறும் உலக அளவில் பல்கலைக்கழகங்களின் தர வரிசைப் பட்டியலை வெளியிட்டு வருகிறது. 2023-ம் ஆண்டு தர வரிசைப் பட்டியலுக்காக அந்த நிறுவனத்திடம் கடந்த மார்ச்சில் 104 நாடுகளைச் சேர்ந்த 2,500-க்கும் மேற்பட்ட சர்வதேச அளவிலான கல்வி நிறுவனங்கள் தங்களது தரவுகளைச் சமர்ப்பித்தன.

இந்நிலையில் நேற்று அந்நிறுவனம் வெளியிட்ட தரவரிசைப் பட்டியலில் 1,799 பல்கலைக் கழகங்கள் இடம் பெற்றன.

இதில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் 401-500-வது பிரிவில் இடம் பெற்றுள்ளது.



↑ **அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் க.ரவியிடம் காட்டி வாழ்த்துப் பெற்ற பல்கலைக் கழக தரவரிசைப் பிரிவு இயக் குநர் ஜெ.ஜெயகாந்தன்.**

மேலும் தேசிய அளவில் 4-வது இடத்தையும், தமிழக அளவில் முதலிடத்தையும் பெற்றுள்ளது.

இந்தத் தரவரிசைப் பட்டிய லுக்காக டைம்ஸ் உயர்கல்வி நிறுவனம் கற்பித்தல், ஆராய்ச்சி, அறிவு பரிமாற்றம், சர்வதேச கண்ணோட்டம் ஆகிய நான்கு பிரிவுகளில் உயர்கல்வி நிறுவனங்களின் செயல்திறனை மதிப்பீடு செய்து தரவரிசைப்படுத்தி உள்ளது.

இதுதவிர, 121 மில்லியனுக்கும் அதிகமான ஆராய்ச்சி வெளியீடுகளில் 15.5 மில்லியனுக்கும் அதிகமான மேற்கோள்களைப் பகுப்பாய்வு செய்துள்ளது. உலகளவில் 40 ஆயிரம் அறிஞர்களின் கருத்துகளையும் மதிப்பீடு செய்துள்ளது.

சரியான தரவுகளைச் சேகரித்து சமர்ப்பித்த அழகப்பா பல்கலைக் கழக தரவரிசைப் பிரிவு இயக் குநர் ஜெ.ஜெயகாந்தன் தலைமையிலான குழுவினரையும், பல் கலைக்கழகப் பேராசிரியர்கள், அலுவலர்கள், ஆராய்ச்சி மாண வர்களை துணைவேந்தர் க.ரவி பாராட்டினார்.

# அழகப்பா பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம்



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம், கோவை கற்பகம் நிகர்நிலை பல்கலைக்கழகத்துடன் செவ்வாய்க்கிழமை செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் க. ரவி, கற்பகம் நிகர்நிலை பல்கலைக்கழக துணைவேந்தர் பி. வெங்கிடாசலபதி, பேராசிரியர்கள்.

**காரைக்குடி, ஜூன் 13:** சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம், கோவை கற்பகம் நிகர்நிலைப் பல்கலைக்கழகத்துக்கிடையே, ஆராய்ச்சிப் படிப்புகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செவ்வாய்க்கிழமை கையொப்பமிடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தில் அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் க. ரவி, கற்பகம் நிகர்நிலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பி. வெங்கடாசலபதி ஆகியோர் கையொப்பமிட்டனர்.

இந்த நிகழ்வின் போது, கற்பகம் நிகர்நிலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி, மேம்பாட்டுத் துறை பேராசிரியர் வி. பார்த்தசாரதி, அழகப்பா பல்கலை. பதிவாளர் (பொறுப்பு) எஸ். ராஜமோகன், மூத்த பேராசிரியர்கள் ஜெ. ஜெயகாந்தன், கே. அலமேலு, சி. வேதிராஜன், ஏ. பத்மபிரியா ஆகியோர் உடனிருந்தனர். இந்த நிகழ்ச்சியில் அழகப்பா பல்கலை. துணைவேந்தர் க. ரவி பேசியதாவது:

இந்த ஒப்பந்தத்தின்படி முதுகலை, ஆராய்ச்சி மாணவர்கள் இரண்டு பல்கலைக்கழகங்களுக்குள் இடம் மாறி ஆராய்ச்சிகளை மேற்கொள்ள முடியும். மேலும் அழகப்பா பல்கலைக்கழகக் கல்வி ஆராய்ச்சித் தரத்தினை உலகளவில் உயர்த்திக் கொள்ள உதவும் என்றார்.

கற்பகம் நிகர்நிலைப் பல்கலை. துணைவேந்தர் பி. வெங்கடாசலபதி பேசியதாவது:

மாணவர்களுக்கு தேசிய ஆராய்ச்சி நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளும், ஆராய்ச்சி கல்விப் பயிலவும் வழிவகுக்கும். மேலும் புதிய ஆராய்ச்சிகளின் மூலம் நாட்டு மக்கள் பயனடைவர் என்றார்.

## அழகப்பா பல்கலையில்

# நான்காவது சுற்றுதர மதிப்பீட்டில் 4க்கு 3.80 புள்ளி பெறுவது இலக்கு

## துணைவேந்தர் ஜி.ரவி பேச்சு



▶ காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடந்த நிகழ்ச்சியில் மாணவர்களுக்கான நடத்தை விதிகளை துணைவேந்தர் ஜி.ரவி வெளியிட்டார்.

காரைக்குடி, ஆக.13: காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக முதுகலை முதலாமாண்டு அறிவியல் துறைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான புத்தாக்க பயிற்சி முகாம் நடந்தது. பதிவாளர் பேராசிரியர் ராஜமோகன் வரவேற்றார். துணைவேந்தர் பேராசிரியர் ஜி.ரவி தலைமை வகித்து பேசுகையில், இப்பல்கலைக் கழகத்தில் மேம்படுத்தப்பட்ட அதிநவீன ஆராய்ச்சி உபகரணங்கள் உள்ளன. இதனை மாணவர்கள் நல்ல முறையில் பயன்படுத்தி ஆராய்ச்சிகளை மேம்படுத்தி கொள்ள வேண்டும். இந்தியாவில் உள்ள பல்வேறு உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் இங்குள்ள ஆராய்ச்சி வசதிகளை பயன்படுத்திக் கொள்கின்றனர். இப்பல்கலைக்கழகம் தேசிய தரநிர்ணய குழுவின் நான்காவது சுற்று தரமதிப்பீட்டிற்கு தயாராகி கொண்டு இருக்கிறது.

இதில் 4 புள்ளிகளுக்கு அதிகபட்சமாக 3.80 என்ற புள்ளியை பெறுவதை இலக்காக கொண்டு செயல்பட்டு வருகிறோம். இதனை அடைய நாம் அனைவரும் ஒருங்கிணைந்து கடினமாக உழைக்க வேண்டும். இதில் மாணவர்களின் பங்கும் மிக முக்கியமானது. நேர்மறையான சிந்தனை, படிப்பில் முழுக்கவனம் செலுத்துதல், இலக்கை நோக்கி பயணித்தல் போன்ற நற்குணங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். இப் பல்கலைக்கழகத்தில் ரெகுலர் கல்வி படிக்கும் மாணவர்கள் தொலைநிலைக்கல்வி வாயிலாக வழங்கப்படும் பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளில் சேர்ந்து படிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளது. இம் மாணவர்களுக்கு மட்டும் சிறப்பு சலுகையாக கல்வி கட்டணத்தில் 25 சதவீதம் சலுகை வழங்கப்படுகிறது. இதனை மாணவர்கள் பயன்படுத்தி பிறதுறை சார்ந்த திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

அறிவியல் புல முதன்மையர் பேராசிரியர் ஜெயகாந்தன், தேர்வாணையர் பேராசிரியர் கண்ணபிரான், ஆராய்ச்சி பிரிவு முதன்மையர் பேராசிரியர் வசிகரன், ராக்கிங் தடுப்பு மைய ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் மணிமேகலை, தொலைதூரக்கல்வி இயக்குநர் பேராசிரியர் குருமல்லேஷ்பிரபு உள்பட பலர் கலந்து கொண்டனர். மாணவர் நலன் முதன்மையர் பேராசிரியர் வேதிராஜன் நன்றி கூறினார்.

# மாணவர்கள் நூலகங்களுக்குச் சென்று அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்

## அழகப்பா பல்கலை. துணைவேந்தர்

**காரைக்குடி, ஆக. 7:** மாணவர்கள் நூலகங்களுக்குச் சென்று புத்தகங்களைப் படித்து பாடம் சம்பந்தப்பட்ட அறிவை வளர்த்துக் கொள்ளவேண்டும் என அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் க. ரவி தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் முதுநிலை முதலாண்டு அறிவியல் துறைகளின் மாணவ, மாணவிகளுக்கு புத்தாக்கப் பயிற்சி தொடக்க விழா பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா கலையரங்கில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து துணைவேந்தர் க. ரவி பேசியதாவது:

அழகப்பா பல்கலைக்கழகம், தேசிய தர நிர்ணயக் குழுவின் 4-ஆவது சுற்று தரமதிப்பீட்டுக்குத் தயாராகி வருகிறது. இதில் 3.80 என்ற புள்ளியைப் பெறுவது முக்கிய இலக்காகும். இதை அடைய



காரைக்குடி அழகப்பா பல்கலை.யில் திங்கள்கிழமை நடைபெற்ற முதுநிலை முதலாண்டு மாணவர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி தொடக்க விழாவில் பேசிய துணைவேந்தர் க. ரவி.

அனைவரும் ஒருங்கிணைந்து உழைக்க வேண்டும்.

இந்தப் பல்கலைக்கழகத்தில் மேம்படுத்தப்பட்ட அதிநவீன ஆராய்ச்சி உபகரணங்கள் உள்ளன. இதை மாணவர்கள் முறையாகப் பயன்படுத்தி தங்களின் ஆராய்ச்சிகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், இங்கு நவீன வசதிகளைக் கொண்ட மைய நூலகமும், புலங்கள் வாரியாக நூலகங்களும் உள்ளன. இந்த நூலகங்களுக்கு மாணவர்கள் சென்று நிறைய நூல்களைப் படித்து தங்களின் பாடம் சம்பந்தப்பட்ட அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

இதில் அறிவியல் புல முதன்மையர் ஜெ. ஜெயகாந்தன், தேர்வாணையர் (பொறுப்பு) கண்ணபிரான், ஆராய்ச்சிப் பிரிவு முதன்மையர் வசீகரன், வன்கொடுமைத் தடுப்பு மைய ஒருங்கிணைப்பாளர் மணிமேகலை, தொலைதூரக் கல்வி இயக்குநர் (பொறுப்பு) குருமல்லேஷ் பிரபு, நூலகர் சி. பாஸ்கரன், பேராசிரியர்கள் ஆகியோர் பேசினர். முன்னதாக, பல்கலைக்கழகப் பதிவாளர் (பொறுப்பு) சு. பாஸ்கரன் வரவேற்றார். மாணவர் நலன் முதன்மையர் சி. வேதிராஜன் நன்றி கூறினார்.

# அழகப்பா பல்கலை புரிந்துணர்வு ஒப்பந்தம்

**காரைக்குடி, ஜூன் 15**

காரைக்குடி அழகப்பா பல்கலை., கற்பகம் நிகர்நிலை பல்கலை., புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யும் நிகழ்ச்சி நடந்தது.

அழகப்பா பல்கலை., துணைவேந்தர் க. ரவி மற்றும் கற்பகம் நிகர்நிலைப் பல்கலை., துணைவேந்தர் பி. வெங்கடாசலபதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். கற்பகம்

நிகர்நிலை பல்கலை., ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு துறை பேராசிரியர் பார்த்தசாரதி, பதிவாளர் ராஜமோகன் பேராசிரியர்கள் ஜெயகாந்தன், உள்தர மதிப்பீட்டு பிரிவு தலைவர் அலமேலு, மாணவர்கள் நலன் முதன்மையர் வேதிராஜன், திட்ட மற்றும் வளர்ச்சி பிரிவு தனி அலுவலர் பத்மபிரியா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ஆராய்ச்சி தரத்தினை தேசிய அளவில் உயர்த்த

# பல்வேறு பல்கலையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் ஜி.ரவி தலைமையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது.

## துணைவேந்தர் ஜி.ரவி பேச்சு

காரைக்குடி, ஜூன் 6: காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் மற்றும் எஸ் ஆர்எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக் கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யும் நிகழ்வு நடந்தது. துணைவேந்தர் பேராசிரியர் ஜி.ரவி தலைமையில் எஸ்ஆர்எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகதுணைவேந்தர் பேராசிரியர் முத்தமிழ்ச் செல்வன் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

மூத்த பேராசிரியர்கள் உயிரி தகவலியல் துறை தலைவர் ஜெயகாந்தன், பதிவாளர் ராஜமோகன், உள்தரமதிப்பீட்டு பிரிவு தலைவர் அலமேலு, மாணவர்கள் நலன் முதன்மையர் வேதிராஜன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

துணைவேந்தர் பேராசிரியர் ஜி.ரவி பேசுகையில், இந்த உடன்படிக்கை மூலம் பல்கலைக்கழக பேராசிரியர்கள், முதுகலை மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் இரண்டு பல்கலைக் கழகங்களுக்குள் இடம் மாறி ஆராய்ச்சிகளை மேற்கொள்ள உதவும். இப்பல்கலைக்கழக கல்வி மற்றும் ஆராய்ச்சி தரத்தினை தேசிய மற்றும் உலக அளவில் உயர்த்திக் கொள்ள இதுபோன்ற உடன்படிக்கைகள் உதவும். 5 ஆண்டுகளுக்கான இந்த உடன்படிக்கையின் படி கூட்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும். அரிய பல தகவல்களை பரிமாறுவதற்கும், கல்வி நிறுவனங்களின் தொழில்நுட்பத்தினை பயன்படுத்துவதற்கும் பயனாக இருக்கும். இதன் மூலம் மாணவர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்க வாய்ப்புள்ளது என்றார்.

## MoU signed

A Memorandum of Understanding between Alagappa University, Karaikudi, and SRM Institute of Science and Technology near Chennai was signed on June 1 to facilitate collaborative research activities and student exchange programmes. G.Ravi, Vice-Chancellor, Alagappa University, and C. Muthamizhchelvan, VC, SRM Institute, inked the MoU. Mr. Ravi said the MoU would help in enhancing professional expertise and competence of the faculty and researchers in Life Sciences, Material and Chemical Sciences. He appreciated the efforts of J. Jeyakanthan, Head, Department of Bioinformatics, for initiating the joint venture.



MoU signing ceremony at Alagappa University in Karaikudi

S. Rajamohan, Registrar (in-charge); C.Vethirajan, Dean, Student Affairs; and K. Alamelu, Director, IQAC, were present.

## Awardees felicitated

RVS College of Education, Dindigul, is celebrating the 75th Independence Year through many events. As part of this, the college organised 'Valarum India, Malarum Thiramai' on June 5. To appreciate the young talents, who achieved in various fields such as yoga, science, technology, and literature, Young Talent Award was given to Iraimalar, Prithviraj Sathiyanarayana and Saranga Selvan. The programme was presided over by retired IAS officer Karpoora Sundara Pandian. V. Krishnakumar, Director, RVS Educational Institutions; Kathirvel, Principal, RVS Polytechnic College; and Selvin, Principal, RVS College of Education, congratulated the awardees.

தினமலர், 24.06.2023

# உயர் கல்வி தரவரிசை பட்டியல் அழகப்பா பல்கலை முதலிடம்

**காரைக்குடி, ஜூன் 24–** காரைக்குடி அழகப்பா பல்கலை டைம்ஸ் உயர் கல்வி நிறுவனத்தால் வெளியிடப்பட்ட ஆசிய பல்கலை தரவரிசை பட்டியலில் 111வது இடத்தையும், தமிழக அளவில் முதலிடத்தையும் பெற்றுள்ளது.

டைம்ஸ் உயர்கல்வி நிறுவனத்தால் ஆசிய பல்கலை தரவரிசை பட்டியல் வெளியிடப்பட்டது.

928க்கும் மேற்பட்ட ஆசிய அளவிலான கல்வி நிறுவனங்கள் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

இதில் அழகப்பா பல்கலை 111 வது இடத்தை பெற்றுள்ளது. இந்தியாவிலிருந்து பங்கேற்ற உயர் கல்வி நிறுவனங்களில் 6வது இடத்தையும் தமிழக அளவில் முதலிடத்தையும் பெற்றுள்ளது. அழகப்பா பல்கலை தரவரிசை பிரிவின் இயக்குனர் ஜெயகாந்தன் மற்றும் குழுவினர் தரவுகளை சேகரித்து சமர்ப்பித்தனர்.

மேலும் தேசிய தர நிர்ணய குழுவால் வழங்கப்பட்ட ஏ பிளஸ் அங்கீகாரம், தேசிய மனித வளத்துறை வழங்கும் தரவரிசையில் 30வது இடம் பெற்றுள்ளது.

டைம்ஸ் ஹையர் எஜுகேஷன் உலக தரவரிசையில் 401 – 500 வது பிரிவிலும், இளம் பல்கலை உலகத் தரவரிசையில் 138 வது இடமும், க்யு. எஸ். நிறுவனத்தால் வெளியிடப்பட்ட ஆசிய அளவிலான தரவரிசை பட்டியலில் 251– 260 வது பிரிவிலும், தெற்காசிய அளவிலான தரவரிசையில் 51 வது இடமும் பெற்றுள்ளது.

பல்கலையை தரவரிசை பட்டியலில் இடம் பெறச் செய்த பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவர்களை துணை வேந்தர் க.ரவி பாராட்டினார்.

## ஆசிய தரவரிசையில் இந்திய அளவில்

# அழகப்பா பல்கலை 6வது இடம்

காரைக்குடி, ஜூன் 27: டைம்ஸ் உயர்கல்வி நிறுவனத்தால் வெளியிடப்பட்ட ஆசியப் பல்கலைக்கழக தரவரிசையில் அழகப்பா பல்கலைக் கழகம் இந்திய அளவில் 6வது இடம், தமிழ்நாட்டில் முதலிடத்தை பெற்றுள்ளது என துணை வேந்தர் ஜி.ரவி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, டைம்ஸ் உயர்கல்வி நிறுவனம் கற்பித்தல், ஆராய்ச்சி, அறிவு பரிமாற்றம், சர்வதேச கண்ணோட்டம் மற்றும் தொழில்துறை வருமான ஆகிய ஐந்து குறிப்பிட்ட பகுதிகளின் கீழ் உயர்கல்வி நிறுவனங்களின் செயல்திறனை மதிப்பீடு செய்து தரவரிசைப்படுத்தி வருகிறது. இத்தரவரிசை பட்டியலில் கலந்து கொள்வதற்காக இப்பல்கலைக்கழக தரவரிசைப் பிரிவின் இயக்குநர், மூத்த பேராசிரியர் ஜெ.ஜெயகாந்தன் மற்றும் குழுவினர் பல்கலைக் கழகத்தின் 2022ம் ஆண்டுக்கான தரவுகளை சேகரித்து, சரியாகப் பகுப்பாய்வு செய்து சமர்ப்பித்திருந்தனர்.

2022ம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 928க்கும் மேற்பட்ட ஆசிய அளவிலான கல்வி நிறுவனங்கள் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன. அதில் அழகப்பா பல்கலைக்கழகம் 111வது இடத்தை பெற்றுள்ளது. இந்தியாவில் இருந்து கலந்து கொண்ட உயர்கல்வி நிறுவனங்களில் 6வது இடத்தையும், தமிழக அளவில் முதலிடத்தை பெற்றுள்ளது. இப்பல்கலைக்கழகம் தேசிய தர நிர்ணய குழுவால் வழங்கப்பட்ட ஏ பிளஸ் அங்கீகாரம். தேசிய மனித வளத்துறை வழங்கும் தரவரிசையில் 30வது இடம். டிஎச்இ உலக தரவரிசையில் உலக அளவில் 401 முதல் 500வது பிரிவிலும், இளம் பல்கலைக்கழக உலக தரவரிசையில் 138 இடம். கியு.எஸ். நிறுவனத்தால் வெளியிடப்பட்ட ஆசியா அளவிலான தரவரிசைப் பட்டியலில் 251 முதல் 260வது பிரிவு, தெற்காசிய அளவிலான தரவரிசையில் 51வது இடமும் பெற்றுள்ளது. இந்த தரவரிசையில் பல்கலைக்கழகத்தை இடம் பெறச் செய்த பேராசிரியர்கள், அலுவலர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் முதுகலை மாணவர்களை பாராட்டுவதாக தெரிவித்துள்ளார்.

தினமணி - 01.03.2023

# 'நவீன ஆய்வக வசதிகளைப் பயன்படுத்தி மாணவர்கள் முன்னேற வேண்டும்'

**காரைக்குடி, பிப். 28:** நவீன ஆய்வக வசதிகளைப் பயன்படுத்தி மாணவர்கள் முன்னேற வேண்டும் என்று அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் க. ரவி வலியுறுத்தினார்.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக அறிவியல் புலத்தின் சார்பில் தேசிய அறிவியல் தினம் செவ்வாய்க்கிழமை பார்வையாளர்கள் தினமாகக் கொண்டாடப்பட்டது. பல்கலைக்கழகத்தின் அறிவியல் வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் அறிவியல் துறை முதன்மையர் ஜெ. ஜெயகாந்தன் தொடக்க உரையாற்றினார்.

நிகழ்ச்சிக்கு துணைவேந்தர் க.ரவி தலைமை வகித்துப் பேசியதாவது:

வானமும், கடலும் ஏன் நீல நிறத்தில் தோன்றுகிறது என்று கூறிய முதல் இந்திய விஞ்ஞானி இயற்பியல் மேதை சர் சி.வி. ராமன். சூரிய ஒளியின் ஏழு நிறங்களில் நீல நிறம் அதிகமாக சிதறடிக்கப்படுகிறது. அதனாலே வானமும் கடலும் நீலமாகத் தோன்றுகின்றன என்ற அவரது முடிவு பௌதீக உலகையே புரட்டிப் போட்டது.

சூரிய ஒளி தண்ணீரிலும் மற்ற பொருள்களிலும் எவ்வாறு பயணிக்கிறது என்பதை ஆர்வத்துடன் ஆராய்ந்த அவர், ஒளி பல்வேறு பொருள்களில் பயணிக்கும் போது புதிய கோடுகள் உருவாவதையும் கணித்துக் கூறினார். அது ராமன் விளைவு என்று அழைக்கப்படுகிறது. ராமன் விளைவு 1928-ஆம் ஆண்டு பிப்ரவரி 28-ஆம் தேதி கண்டுபிடிக்கப்பட்டது. 1930-இல் நோபல் பரிசு சர்.சி.வி. ராமனுக்கு வழங்கப்பட்டது. 1954-இல் இந்திய அரசு அவருக்கு பாரத ரத்னா விருது வழங்கிக் கௌரவித்தது.

எனவே, வருங்காலத்தில் மாணவர்கள் தலைசிறந்த விஞ்ஞானிகளாக வரவேண்டும். அழகப்பா பல்கலைக்கழகத்தில் உள்ள நவீன ஆய்வக வசதிகளை மாணவர்கள் பயன்படுத்திக் கொண்டு, ஆராய்ச்சி அறிவை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் வெ. பழனிச்சாமி, அறிவியல் வளாக இயக்குநர் அ.அருண், என்.எஸ்.எஸ் ஒருங்கிணைப்பாளர் ப. சீனிவாசன், அறிவியல் துறைப் பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் பலர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழகத்தின் அறிவியல் துறைகளை 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், பொதுமக்கள் பார்வையிட்டனர்.



அழகப்பா பல்கலைக்கழக அறிவியல் வளாகத்தில் செவ்வாய்க்கிழமை பார்வையாளர்கள் தினத்தை தொடங்கி வைத்து நவீன ஆய்வக வசதிகளை பள்ளி மாணவர்களுடன் பார்வையிட்ட துணைவேந்தர் க. ரவி.

தினமலர் - 01.03.2023




காரைக்குடி அழகப்பா பல்கலை அறிவியல் வளாகத்தில் பார்வையாளர் தினத்தையொட்டி நடந்த கண்காட்சியை துவக்கி வைத்து துணைவேந்தர் ரவி (இடமிருந்து முதலாவது) பார்வையிட்டார்.

# அழகப்பா பல்கலையில் பார்வையாளர் தினம்

## ஆசிய பல்கலை தரவரிசை பட்டியல்

# அழகப்பா பல்கலை 4வது இடம்

**காரைக்குடி, நவ.17:** ஆசியப் பல்கலைக் கழக அளவிலான தரவரிசை பட்டியலில் அழகப்பா பல்கலைக் கழகம் 271 முதல் 280வது இடத்தையும் தமிழ்நாடு அளவில் 4வது இடத்தையும் பெற்றுள்ளது என துணைவேந்தர் ஜி.ரவி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில், கியூ.எஸ் நிறுவனம் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் ஆசியப் பல்கலைக்கழக அளவிலான பல்கலைக் கழகங்களின் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டு வருகிறது. 2022ம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 857க்கும் மேற்பட்ட ஆசிய அளவிலான பல்கலைக் கழகங்கள் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன. இதில் அழகப்பா பல்கலைக் கழக தரவரிசை பிரிவின் இயக்குநர் பேராசிரியர் முனைவர் ஜெ.ஜெயகாந்தன் தரவுகளை சேகரித்து, சரியாகப் பகுப்பாய்பு செய்து சமர்ப்பித்து இருந்தார்.

அதன்படி தற்போது வெளியிடப்பட்ட 2024ல் தரவரிசைப்பட்டியலில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் 271 முதல் 208வது இடத்தையும் தெற்கு ஆசிய அளவில் 59வது இடத்தையும் பெற்றுள்ளது. இந்தியாவில் இருந்து கலந்து கொண்ட 148 உயர்கல்வி நிறுவனங்களில் 32வது இடத்தையும், தமிழ்நாடு அளவில் நான்காவது இடத்தையும் பெற்றுள்ளது.

இப்பல்கலைக்கழகம் தேசிய தர நிர்ணய குழுவால் வழங்கப்பட்ட ஏபிள அங்கீகாரம், தேசிய மனித வளத்துறை வழங்கும் தரவரிசையில் பல்கலைக்கழக அளவில் 30வது இடம். ஆராய்ச்சி நிறுவனங்களில் 43வது இடமும், உலக பல்கலைக்கழகங்களுக்கான தரவரிசை 2023ல் 401 முதல் 500வது இடமும். ஆசிய பல்கலைக்கழகங்களுக்கான தரவரிசையில் 111வது இடமும் பெற்றுள்ளது. இந்த உயரிய தரவரிசையில் இடம் பெற செய்த பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களை பாராட்டுவதாக தெரிவித்தார்.



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் தமிழ்நாடு அளவில் 4வது இடத்தை பெற்றுள்ளதை துணை வேந்தர் ஜி.ரவி வெளியிட்டார். உடன் பேராசிரியர் ஜெ.ஜெயகாந்தன் உள்பட பலர் உள்ளனர்.

உயர்கல்வி நிறுவன தரவரிசை

# அழகப்பா பல்கலை 2வது இடம்

## துணைவேந்தர் ஜி.ரவி தகவல்

**காரைக்குடி, அக்.1:** அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஜி.ரவி கூறுகையில், டைம்ஸ் உயர்கல்வி நிறுவனம் சார்பில் கற்பித்தல், ஆராய்ச்சி, அறிவு பரிமாற்றம் மற்றும் சர்வதேச கண்ணோட்டம் ஆகிய நான்கு குறிப்பிட்ட பகுதிகளின் கீழ் உயர்கல்வி நிறுவனங்களின் செயல் திறனை மதிப்பீடு செய்து தரவரிசைப்படுத்தி வருகிறது. 2023ம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 108 நாடுகளை சேர்ந்த 10050 கல்வி நிறுவனங்கள் தரவரிசைக்கு கலந்து கொண்டன. 2673க்கும் அதிகமான உலக அளவிலான கல்வி நிறுவனங்கள் தங்களின் தரவுகளை சமர்ப்பித்து இருந்தன. 1904 பல்கலைக்கழகங்கள் தரவரிசையில் இடம் பெற்றன. இத்தரவரிசைப்பட்டியலில் கலந்து கொள்வதற்காக அழகப்பா பல்கலைக்கழக தரவரிசைப் பிரிவின் இயக்குநர், முத்த பேராசிரியர் ஜெ.ஜெயகாந்தன் மற்றும் குழுவினர் தரவுகளை சேகரித்து, சரியாகப் பகுப்பாய்வு செய்து சமர்ப்பித்து இருந்தனர்.

டைம்ஸ் உயர்கல்வி நிறுவனத்தால் கடந்த 27ம் தேதி வெளியிடப்பட்ட உலக பல்கலைக்கழக தரவரிசைப் பட்டியல் 2024ம்படி இப்பல்கலைக்கழகம் 601 முதல் 800வது பிரிவில் இடம் பெற்றுள்ளது. இந்தியாவில் இருந்து கலந்து கொண்ட உயர்கல்வி நிறுவனங்களில் 6வது இடத்தையும், தமிழ்நாடு அளவில் இலண்டாமிடத்தையும் அழகப்பா பல்கலைக்கழகம் பெற்றுள்ளது. இந்த உயரிய தரவரிசையில் பல்கலைக்கழகத்தை இடம் பெற செய்த பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களை பாராட்டுவதாக தெரிவித்தார்.

# சுற்றுச்சூழலை பாதிக்காத குறைந்த விலையில் உரம்

## அழகப்பா பல்கலை.ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிப்பு



▶ சென்னை ஆளுநர் மாளிகையில் நடந்த வேளாண் கண்காட்சியில் அழகப்பா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் சார்பில் வைக்கப்பட்டு இருந்த ஸ்டாலை ஆளுநர் ஆர்.என்.ரவி பார்வையிட்டார். உடன் பல்கலை ஆராய்ச்சி புல டீன் பேராசிரியர் ஜெ.ஜெயகாந்தன் உள்பட பலர் உள்ளனர்.

**காரைக்குடி, நவ.9:** சென்னை ஆளுநர் மாளிகையில் வேளாண் விஞ்ஞானிகள், விவசாய உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் விவசாய தொழில் முனைவோர் கண்காட்சி நடந்தது. இதில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஜி.ரவி ஆலோசனையின்படி, அறிவியல் புல டீன் பேராசிரியர் ஜெ.ஜெயகாந்தன் தலைமையில் முதன்மை ஆய்வாளர்கள் பேராசிரியர்கள் முனைவர் கா.பாண்டிமாதேவி, உயிர் தொழில்நுட்பவியல் துறை முனைவர் தா.கவிதா, நுண்ணுயிரியல் துறை முனைவர் சுகந்தி, நுண் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை ஆராய்ச்சி மாணவர்கள் கிருத்திகா, மணிவினோத், பிரகாஷ்குமார் ஆகியோர் கொண்ட குழுவினர் பல்கலைக்கழக ஆராய்ச்சி தயாரிப்புகளை காட்சிபடுத்தினர்.

ஆளுநர் மற்றும் வேளாண் விஞ்ஞானிகள், வேளாண் தொழில்முனைவோர்கள் பல்கலைக்கழக கண்டுபிடிப்புகளை பார்வையிட்டு பாராட்டினர்.

இதுகுறித்து முனைவர் ஜெ.ஜெயகாந்தன் கூறுகையில், அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு ஆளுநர் வருகை புரிந்தபோது பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் அறிவியல் வளாகத்தில் காட்சிபடுத்தப்பட்டு இருந்ததை பார்வையிட்டார். இதில் வேளாண் சார்ந்த தயாரிப்புகளை ஆளுநர் மாளிகையில் நடக்கவுள்ள கண்காட்சியில் காட்சிபடுத்துமாறு அறிவுறுத்தினார். அதன்படி அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் ஜி.ரவி ஆலோசனையின்படி ஆராய்ச்சி குழு ஒருங்கிணைக்கப்பட்டு கண்டுபிடிப்புகள் காட்சிபடுத்தப்பட்டது. தற்போது பயன்பாட்டில் உள்ள செயற்கை உரங்கள், பூச்சி மற்றும் பூஞ்சை கொல்லிகள் ஆரோக்கியத்திற்கும், நீர் மற்றும் மண் வாழ் நுண்ணுயிரிகள், நன்மை பயக்கும் பூச்சிகளுக்கும் ஆபத்தானவை. இது தொடர்பாக அழகப்பா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள், பயிர் உற்பத்தி திறனை மேம்படுத்தவும், சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்காத மற்றும் குறைந்த செலவிலான உரங்களை உருவாக்கி உள்ளோம் என்றார்.

# காரைக்குடி அழகப்பா பல்கலைக்கு சிறப்பு ஆராய்ச்சி மேற்கோள் விருது

**காரைக்குடி, செப்.30–**

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கு இந்திய சிறப்பு ஆராய்ச்சி மேற்கோள் விருது 2023 வழங்கப்பட்டுள்ளது.

டில்லியில் வெப் ஆப் சயின்ஸ் கிளாரிவேட் நிறுவனத்தால் இந்திய சிறப்பு ஆராய்ச்சிக்கான விருது வழங்கும் விழா நடந்தது. கிளாரிவேட் நிறுவன துணைத் தலைவர் ஓஷர் ஜிலன்ஸ்கை வரவேற்றார். அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி வாரிய தலைவர் சீதாராம், கிளாரிவேட் நிறுவன ஆராய்ச்சி கூட்டமைப்பின் துணைத் தலைவர் டயான் தாமஸ் கலந்து கொண்டனர். மத்திய உடல் நலம் மற்றும் குடும்ப நல அமைச்சக இயக்குனர் அப்துல் கோயல் பங்கேற்றார். விழாவில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கு இந்திய சிறப்பு ஆராய்ச்சி மேற்கோள் விருது 2023 வழங்கப்பட்டது. ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளுக்கான கட்டுரைகளை அதிக அளவில் வெப் ஆப் சயின்சில் மேற்கோள்களாக காட்டப்பட்டுள்ளதால் இது வழங்கப்பட்டுள்ளது. துணை வேந்தர் ரவி விருதை பெற்றார்.

துணை வேந்தர் கூறியதாவது: அழகப்பா பல்கலையில் 44 துறைகள் உள்ளன. ஆராய்ச்சிகளை மேற்கொள்ள சிறந்த கட்டமைப்பு அறிவியல் கூடங்கள் ஆராய்ச்சி உபகரணங்கள் உள்ளது. உலகத் தரத்திற்கு இணையான ஆராய்ச்சிகளை, பேராசிரியர்களும் ஆராய்ச்சி மாணவர்களும் மேற்கொண்டு வருகின்றனர்.

அரசு ரூசா திட்டத்தின் மூலம் இதுவரை ரூ.120 கோடி வழங்கி உள்ளது. இப்பல்கலை ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டுள்ள ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை உலக ஆராய்ச்சியாளர்கள் தங்களது கண்டுபிடிப்பில் 1 லட்சத்து 7 ஆயிரத்து 570 முறை மேற்கோள்களாக பயன்படுத்தி உள்ளனர். இதுவரை 10 ஆயிரத்து 758 ஆராய்ச்சி வெளியீடுகளும், எச் குறியீடு 110 ம் அழகப்பா பல்கலை பெற்றுள்ளது, என்றார்.

## காரைக்குடி அழகப்பா பல்கலை.க்கு

# இந்திய அளவில் சிறந்த ஆராய்ச்சி மேற்கோள் விருது



► டெல்லியில் வெப் ஆப் சயின்ஸ் மற்றும் கிளாரிவேட் நிறுவனம் சார்பில் நடந்த விருது வழங்கும் விழாவில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு இந்திய அளவில் சிறந்த ஆராய்ச்சி மேற்கோள் விருதினை துணைவேந்தர் ஜி.ரவியிடம் வழங்கப்பட்டது.

**காரைக்குடி, செப். 30:** காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு இந்திய அளவில் சிறந்த ஆராய்ச்சி மேற்கோள் விருது வழங்கப்பட்டுள்ளது என துணைவேந்தர் ஜி.ரவி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது: மத்திய அரசின் கல்வி அமைச்சகத்துடன் இணைந்து செயல்பட்டு வரும் வெப் ஆப் சயின்ஸ் மற்றும் கிளாரிவேட் நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் சிறந்த ஆராய்ச்சிக்கான விருதுகளை வழங்கி வருகிறது. இந்நிறுவனத்தை பொறுத்தவரை தேசிய அளவில் அனைத்து கல்வி நிறுவனங்கள் வெளியிட்டு வரும் ஆராய்ச்சி தொடர்பான கட்டுரைகளை ஆய்வு செய்து அதன் தரத்தினை வெளியிட்டு வரும். தவிர ஆய்வு கட்டுரைகள் உலக அளவில் எவ்வளவு ஆராய்ச்சியாளர்கள் மேற்கோள் காட்டியுள்ளனர் என்பது குறித்தும் வெளியிடுவார்கள். இதில் அதிகளவில் ஆய்வு கட்டுரைகளை மேற்கோள் காட்டப்பட்ட கல்வி நிறுவனத்துக்கு விருது வழங்கப்படும். இதன்படி இந்த ஆண்டுக்கு இந்திய அளவில் 14 சிறந்த கல்வி நிறுவனங்களை தேர்வு செய்து விருது வழங்கினர். இதில் இந்திய அளவில் 6 பல்கலைக்கழகங்கள் விருது பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் இருந்து அழகப்பா பல்கலைக்கழகம் மட்டுமே இந்த சிறப்பு ஆராய்ச்சி மேற்கோள் விருதினை பெற்றுள்ளது. டெல்லியில் நடந்த விழாவில் இதற்கான விருது வழங்கப்பட்டது. அழகப்பா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டுள்ள ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை உலக ஆராய்ச்சியாளர்கள், தங்களது கண்டுபிடிப்பில் ஒரு லட்சத்து 7

### துணைவேந்தர் தகவல்

ஆயிரத்து 570 முறை மேற்கோள்களாக பயன்படுத்தியுள்ளனர். இதுவரை சுமார் 10 ஆயிரத்து 758 ஆராய்ச்சி வெளியீடுகளும் மற்றும் எச் குறியீட்டில் 110ம் பெற்றுள்ளது. இப்பல்கலைக்கழகத்தில் உள்ள 44 துறைகளில் பேராசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் பல்வேறு ஆராய்ச்சிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். ஆராய்ச்சிகளை மேற்கொள்ள சிறந்த கட்டமைப்பு, அறிவியல் கூடங்கள், ஆராய்ச்சி உபகரணங்கள் உள்பட பல்வேறு வசதிகள் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக யுஎஸ்ஐசி என்ற ஆராய்ச்சி கூடத்தை உருவாக்கி அதில் உயர்தர ஆராய்ச்சி உபகரணங்கள் வைக்கப்பட்டுள்ளது. இவைகளை பயன்படுத்தி உலகத்தரத்திற்கு இணையாக ஆராய்ச்சிகளை பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் மேற் கொண்டு வருகின்றனர். இந்த ஆராய்ச்சி கட்டுரைகள் உயர்தர ஆராய்ச்சி இதழ்களில் வெளியிடப்பட்டு வருகிறது. கொரோனா காலத்தில் கொரோனா வைரசை இயற்கை மருந்துகளை பயன்படுத்தி எவ்வாறு தடுக்கலாம் என்பது குறித்து ஆராய்ச்சி கட்டுரைகள் வெளியிடப்பட்டது. இவ்விருது பெற காரணமாக இருந்த அனைவரையும் பாராட்டுகிறேன். இவ்வாறு கூறினார்.

# டைம்ஸ் உயர்கல்வி நிறுவனத்தின் ஆசிய அளவிலான தரவரிசைப்பட்டியலில்

## அழகப்பா பல்கலைக்கு 122-வது இடம்



புதுடெல்லி:

டைம்ஸ் உயர்கல்வி நிறுவனத்தால் வெளியிடப்பட்ட ஆசிய பல்கலைக்கழக தரவ ரிசை பட்டியலில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் 122-வது இடத்தைப் பெற்றுள்ளது.

2021 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 829 க்கும் மேற்பட்ட ஆசிய அளவிலான கல்வி நிறு வனங்கள் தரவரிசைப் படுத் தப்பட்டுள்ளன. தரவரிசையில் காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்திற்கு 122 வது இடம் கிடைத்துள்ளது.

இந்தியாவிலிருந்து கலந்துகொண்ட உயர் கல்வி நிறுவனங்களில் அழகப்பா பல்கலைக்கழகம் 6-ஆவது இடத்தையும், தமிழக அளவில் முதலிடத்தையும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

டைம்ஸ் உயர் கல்வி நிறுவனம் இத்தரவரிசைக்காக கற்பித்தல், ஆராய்ச்சி, அறிவுப்பரிமாற்றம், சர்வதேச கண்ணோட்டம் மற்றும் தொழில்துறை வருமானம் ஆகிய ஐந்து குறிப்பிட்ட பகுதிகளின்கீழ் உயர்கல்வி நிறுவனங்களின் செயல் திறனை மதிப்பீடு செய்து தரவரிசைப்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

தரவரிசைப் பட்டியலில் கலந்துகொள்வதற்காக அழகப்பா பல்கலைக்கழக தரவரிசை பிரிவின் இயக்குநர் பேரா. ஜெயகாந்தன் மற்றும் குழுவினர் பல்கலைக்கழகத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான தரவுகளை சேகரித்து சரியாகப் பதிவுசெய்து சமர்ப்பித்துள்ளனர்.

இந்த உயரிய தரவரிசையில் அழகப்பா பல்கலைக்கழகத்தை இடம் பெறச்செய்த பேராசிரியர்கள், அலுவ லர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களை துணை வேந்தர் பொறுப்புக்குழு தலைவரும், தமிழக உயர் கல்வித்துறை முதன்மை செயலாளருமான முனைவர் கார்த்திகேயன், துணைவேந்தர் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் முனைவர் சுவாமிநாதன், பேராசிரியர் கருப்புச்சாமி மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர்கள் பேரா. சங்கரநாராயணன், முனைவர் குணசேகரன், டாக்டர் ராஜா மற்றும் பதிவாளர் (பொ) ராஜாமோகன் ஆகியோர் பாராட்டினர்.

# ஆசிய அளவிலான தரவரிசைப் பட்டியலில் அழகப்பா பல்கலைக் கழகம் 122–வது இடம்

காரைக்குடி, ஜூன். 11–
டைம்ஸ் உயர்கல்வி நிறுவனத்தால் வெளியிடப்பட்ட ஆசிய பல்கலைக்கழக தரவரிசை பட்டியலில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் 122 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

2021 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 829 க்கும் மேற்பட்ட ஆசிய அளவிலான கல்வி நிறுவனங்கள் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

தரவரிசையில் காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்திற்கு 122 வது இடம் கிடைத்துள்ளது. இந்தியாவிலிருந்து கலந்துகொண்ட உயர்கல்வி நிறுவனங்களில் அழகப்பா பல்கலைக்கழகம் 6ஆவது இடத்தையும், தமிழக அளவில் முதலிடத்தையும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.



டைம்ஸ் உயர்கல்வி நிறுவனம் இத்தரவரிசைக்காக கற்பித்தல், ஆராய்ச்சி, அறிவுப்பரிமாற்றம், சர்வதேச கண்ணோட்டம் மற்றும் தொழில்துறை வருமானம் ஆகிய ஐந்து குறிப்பிட்ட பகுதிகளின்கீழ் உயர்கல்வி நிறுவனங்களின் செயல்திறனை மதிப்பீடு செய்து தரவரிசைப்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

தரவரிசைப் பட்டியலில் கலந்துகொள்வதற்காக அழகப்பா பல்கலைக்கழக தரவரிசை பிரிவின் இயக்குநர் பேரா. ஜெயகாந்தன் மற்றும் குழுவினர் பல்கலைக்கழகத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான தரவுகளை சேகரித்து சரியாகப் பதிவுசெய்து சமர்ப்பித்துள்ளனர்.

இந்த உயரிய தரவரிசையில் அழகப்பா பல்கலைக்கழகத்தை இடம்பெறச்செய்த பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களை துணைவேந்தர் பொறுப்புக்குழு தலைவரும், தமிழக உயர்கல்வித்துறை முதன்மை செயலாளருமான முனைவர் கார்த்திகேயன், துணைவேந்தர் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் முனைவர் சுவாமிநாதன், பேராசிரியர் கருப்புச்சாமி மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர்கள் பேரா. சங்கரநாராயணன், முனைவர் குணசேகரன், டாக்டர் ராஜா மற்றும் பதிவாளர் (பொ) ராஜாமோகன் ஆகியோர் பாராட்டினர்.

# பச்சை பூமி தலைவர் வேங்கை ஆரோனின் 10 கவிதை நூல்கள் வெளியீட்டு விழா!

புதுக்கோட்டை, டிச., 04: புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டையில் வெள்ளி அரங்கில் நடைபெற்ற பச்சை பூமி தலைவர் கவிஞர் வேங்கை ஆரோனின் 10 கவிதை நூல்கள்வெளியீட்டு விழா நடைபெற்றது. கையில், ஆலி, வேங்கை ஆரோனின் கவிதைகள் ஆகிய நான்கு நூல்களை தங்கமூர்த்தி வெளியிட, இரவின் கதறல், ஒரு புயலின் நாதம், உறைந்த கனவுகள் ஆகிய மூன்று நூல்களை கவிஞர் முத்துநிலவன் வெளியிட, வேங்கை ஆரோன்தமிழ்த் தாய்க்குக் கிடைத்த புதிய வரவு, மிகப் பெரிய கொடை என்றும், மேலும் பல நூல்களை வெளியிட வேண்டும் என்றும் வாழ்த்தினார். கவிஞர் தங்கம் மூர்த்தி தனது சிறப்புரையில் 10 நூல்கள் நிலவை பழனியப்பன், ஆர்எம்வி. கதிரேசன், ஆகியோர் முன்னிலை வகித்துப் பேசினர். வட்டாரக் கல்வி அலுவலர் ஜெயலட்சுமி, கவிஞர் முத்துப்பாண்டியன், முனைவர்மேரி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்




விழாவிற்கு அமுதன் அடிகள் தலைமை தாங்கினார்.

வீணைக்கு வெட்கம், எள்ளு வயல் பூக்களே, மணம் கமழும் திருமறைகள் ஆகிய மூன்று நூல்களை அழகப்பா பல்கலைக்கழக உயிரி தகவலியல் துறை தலைவர், அறிவியல் புல முதன்மையர் முனைவர் ஜெயகாந்தன் வெளியிட , காதல் முதலீடு, நேரம் நம் சத்யராம் ராமுக்கண்ணு, ஆசிரியர் பாஸ்கர், கவிஞர் சோலையப்பன், பேராசிரியர் விஸ்வநாதன், கவிஞர் மகாசுந்தர்,

ஆசிரியர் அமுதன், கவிஞர்பீர்முகமது, முனைவர் புஷ்பலதா, லட்சுமணன், கவிஞர் வெங்கடேசன், ஆகியோர் பெற்றுக் கொண்டனர். கவிச்சுடர் கவிதைப்பித்தன் தனது சிறப்புரையில் கவிஞர் ஒரே நேரத்தில் வெளியிடுவது என்பது கின்னஸ் சாதனைதான் என்று பாராட்டினார். கவிஞர் முத்து நிலவன் மதம் தாண்டி கவிதைகள் மிளிர்வதும் மானுடம் போற்றுவதும் மற்ற மதத்தையும் மதித்துப் போற்றுவதும் பன்முகத் தன்மை யின் அடையாளம் என்று வாழ்த்தினர். தட்சிணாமூர்த்தி, சவரி முத்து, வைர.ந. தினகரன், கள். முன்னதாக அனைவரையும் கவிஞர் ஆண்டனி வரவேற்றுப் பேசினார். நிகழ்ச்சியை கவிஞர் கீதா தொகுத்து வழங்கினார். ஏற்புரையை நூலாசிரியர் கவிஞர்வேங்கைஆரோன் நிகழ்த்தினார். பச்சை பூமி அமைப்பினர் அனைவருக்கும் மரக்கன்றுகளை இலவசமாக வழங்கி, நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்கள்.